$11^{th}$ STD

**பொதுத் தேர்வு - மார்ச் - 2019**

# மாதிரி வினாத்தாள்

# வணிகவியல்

நேரம் : 2.30 மணி　　　　　　　　　　மதிப்பெண் : 90

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**　　　　20 × 1 = 20

1. வியாபாரம் மற்றும் வணிகம் ---------- பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
   அ) பல்லவர்　ஆ) சோழர்　இ) பாண்டியர்　ஈ) சேரர்

2. குடும்பத்திற்கு உணவு சமைப்பது, கோவிலுக்கு செல்வது --------- நடவடிக்கைகள் ஆகும்.
   அ) பக்தி சார்ந்த குடும்ப நடவடிக்கைகள்　ஆ) பொருளாதார நடவடிக்கைகள்
   இ) பொருளாதார சார்பற்ற நடவடிக்கைகள்　ஈ) நிதி நடவடிக்கைகள்

3. வேறுபட்ட ஒன்று எது?
   அ) கன்வேயர் போக்குவரத்து　ஆ) மெட்ரோ இரயில்　இ) புல்லட் இரயில்　ஈ) கப்பல்

4. கீழ்கண்ட எந்த ஆவணம் உரிமைமாற்றத்தை நிகழ்த்தும் ஆவணம் அல்ல?
   அ) பண்டக சான்றாணை　ஆ) துறைமுகச் சான்றாணை
   இ) பண்டக காப்பாளர் இரசீது　ஈ) வழங்கல் ஆணை

5. தவறான ஒன்று எது?
   அ) பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.
   ஆ) பன்னாட்டு நிறுவனங்கள் இறக்குமதியை அதிகப்படுத்தி, வளர்ச்சிக்கு வித்திடுகின்றன.
   இ) பன்னாட்டு நிறுவனங்கள் உள்நாட்டு இயற்கை வளங்களைத் தன் சுயநலத்திற்காகத் தவறாகப் பயன்படுத்துகின்றன.
   ஈ) பன்னாட்டு நிறுவனங்கள் உள்நாட்டில் போட்டியை தூண்டுகின்றன.

6. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள் -------------
   அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது　ஆ) தேர்ந்தெடுக்கப்படவேண்டும்
   இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்　ஈ) மேற்கண்டவற்றில் ஏதும் இல்லை

7. எவை சரியாக பொருந்தவில்லை?
   அ) இந்தியாவின் முதல் வங்கி ----- இந்துஸ்தான் வங்கி
   ஆ) இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா ----- 27 . 01.1921
   இ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ----- 01 .07.1955
   ஈ) ரஷ்யா நாட்டு மத்திய வங்கி ----- ரஷ்யா ரிசர்வ் வங்கி

8. கூற்று (A) : தனியாள் வணிகர் வாடிக்கையாளர்களின் விருப்பங்களைத் தெரிந்து வைத்திருப்பதால், அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார்.
   காரணம் (R) : வாடிக்கயாளர்களின் ஆதரவு தொடர்ந்து தனியாள் வணிகருக்கு கிடைக்கின்றது.
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்



   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி

9. பொருத்துக
   1. துறைவாரி நிறுவனங்கள் -- a. இந்திய நிலக்கரி லிமிடெட்
   2. சட்டமுறை நிறுவனங்கள் -- b. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்
   3. அரசு நிறுமங்கள் -- c. இந்திய இரயில்வேத் துறை
   4. பொதுத்துறை நிறுவனங்கள் -- d. இந்திய ரிசர்வ் வங்கி

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | c | b | a | d |
| ஆ. | d | b | a | c |
| இ. | c | d | a | b |
| ஈ. | c | a | d | b |

10. மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் வணிக இடைநிலையர் --------- ஆவார்.
    அ) உற்பத்தியாளர்　ஆ) தரகர்　இ) சில்லறைவியாபாரி　ஈ) வாடிக்கையாளர்

11. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் ----------- என அழைக்கப்படுகிறது.
    அ) சந்தை வியாபாரிகள்　ஆ) ஒரேவகை பண்டகச்சாலைகள்
    இ) பொதுப் பண்டகச்சாலைகள்　ஈ) தெருக் கடைவியாபாரிகள்

12. நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக்கொள்ளப்பட்டால் அது ------ எனப்படும்.
    அ) பன்னாட்டு வியாபாரம்　ஆ) பன்னாட்டு வணிகம்
    இ) மறு ஏற்றுமதி வியாபாரம்　ஈ) உள்நாட்டு வியாபாரம்

13. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் ரசீது -------------
    அ) அனுப்புகை ரசீது　ஆ) கப்பல் ரசீது
    இ) கப்பல் துணைத்தலைவர் ரசீது　ஈ) வாணிக தூதுவர் இடாப்பு

14. காப்பீட்டின் அடிப்படை கோட்பாடு ----------- ஆகும்.
    அ) மிக்க நம்பிக்கை　ஆ) கூட்டுறவு　இ) பகர உரிமை　ஈ) அண்மை காரணம்

15. புற ஒப்படைப்பின்முக்கிய நன்மை -------------
    அ) உற்பத்தித் திறன்　ஆ) செலவு குறைப்பு　இ) திறன்　ஈ) அலகுகள்

16. ஒப்பந்தம், பதிவு போன்றவை ---------- அமைப்பிற்கு அவசியமில்லை.
    அ) தனியாள் வணிகம்　ஆ) கூட்டாண்மை　இ) கூட்டுப் பங்கு　ஈ) கூட்டுறவு

17. கூட்டாண்மையை எவர் பதிவு செய்யலாம்?
    அ) நிறுமப் பதிவாளர்　ஆ) கூட்டுறவு பதிவாளர்
    இ) கூட்டாண்மை பதிவாளர்　ஈ) மாவட்ட ஆட்சியர்

18. உலக வங்கி அமைந்திருப்பது ------------
    அ) வாஷிங்டன் DC　ஆ) நியூயார்க்　இ) டோக்கியோ　ஈ) ஹாங்காங்

19. இளவருடன் செய்யும் ஒப்பந்தம் ----------
    அ) செல்தகு ஒப்பந்தம்　ஆ) சொல்லாத ஒப்பந்தம்

இ) தவிர்தகு ஒப்பந்தம் ஈ) மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்

20. GST விரிவாக்கம் ---------
அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி ஆ) அரசு விற்பனை வரி
இ) சரக்கு மற்றும் சேவை வரி ஈ) பொது விற்பனை வரி

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. வணிகம் பொருள் தருக.
22. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
23. அயல் நாட்டு நிறுமம் என்றால் என்ன?
24. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?
25. காசோலை - வரைவிலக்கணம் தருக
26. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன ?
27. அமெரிக்க வைப்பு இரசீது என்றால் என்ன?
28. வியாபார இடைநிலையரின் வகைகள் யாவை?
29. யார் வாக்குறுதி அளிப்பவர், யார் வாக்குறுதி பெறுபவர்?
30. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் பணத்தை பெறுதல் எத்தகைய ஒப்பந்தம்? காரணம் கூறுக.

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை?
32. கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?
33. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை?
34. பண்டக சான்றாணை மற்றும் பண்டக இரசீது இடையே மூன்று வேறுபடுகளை கூறுக.
35. துறைமுக இரசீது - குறிப்பு வரைக.
36. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் யாது?
37. சுய உதவி குழு என்றால் என்ன?
38. வழங்கல் வழிகள் குறித்து நீவிர் அறிவது யாது?
39. ஒப்பந்த நிறைவேற்றத்தை யார் கூறலாம்?
40. உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள், தங்களின் நிலங்களை, தனித் தனியே பயிரிடுவதற்கு பதிலாக, அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கம் எது? அதனைப் பற்றி விளக்குக.



## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. தற்போது அனைத்து வங்கிகளும், வங்கி பரிவர்த்தனைக்கான நேரம் மற்றும் செலவை குறைத்து வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கி சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன.
   1) இந்த கூற்று உண்மையா? மேலும்,
   கீழ் குறித்துள்ள அதன் சேவைகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
   2) NEFT- தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Fund Transfer)
   3) RTGS - உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்புகள் (Real Time Gross Settlement System)
   4) இணைய வங்கியியல் (Internet Banking)
   5) கைபேசி வங்கியியல் (Mobail Banking)

   ( அல்லது )

   தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க

42. ஒரு பொது வரையறை நிறுமம் தான் வெளியிடும் பங்குகளையும் கடனீட்டு பத்திரங்களையும் வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஆவணத்தின் பெயர் என்ன? அதன் உள்ளடக்கங்களில் ஏதேனும் எட்டினைக் குறிப்பிடுக.

   ( அல்லது )

   பண்டமாற்று வணிகத்தின் தடைகள் யாவை? ( ஏதேனும் ஐந்து )

43. பின்வரும் வங்கிகளைப் பற்றி சிறு விளக்கம் தந்து, உதாரணம் தருக.
   அ) வணிக வங்கிகள் ஆ) வெளிநாட்டு வங்கிகள் இ) கூட்டுறவு வங்கிகள்
   ஈ) வளர்ச்சி வங்கிகள் உ) சிறப்பு வங்கிகள்

   ( அல்லது)

   வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

44. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.

   ( அல்லது)

   சுய உதவி குழுக்களின் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 10 )

45. உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் ஐந்தினை எழுதுக.

   ( அல்லது)

   நேரடி வரிக்கும் மறைமுக வரிகள் உள்ள வேறுபாடுகளில் ஐந்தினை எழுதுக.

46. ஏதேனும் ஐந்து வகையான பண்டகக் காப்பகங்களை விவரி.

   ( அல்லது)

   போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும். ( ஏதேனும் ஐந்து )

47. ஊதிய வருமனத்தில் இடம்பெறக் கூடிய பத்து வருமானங்களை வரிசைப்படுத்துக.

   ( அல்லது)

   கூட்டுறவின் கொள்கைகள் என்ன? ( ஏதேனும் ஐந்து )